தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1975 ஏப்ரல் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

RAJA SARFOJI COLLEGE, THANJAVUR

*601 Q THIRU—N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether post-graduate courses in English and in Economics are offered for the students in Raja Sarfoji Government College, Thanjavur ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இராஜா சர்போஜி காலேஜில் எம்.ஏ., எம்.எஸ்ஸி.,போன்ற போஸ்ட்–கிராஜூவேட் கோர்ஸ் வகுப்புகளைச் சர்க்கார் ஏன் இன்னும் ஆரம்பிக்கவில்லை ? அவற்றிற்கு ஏற்பாடு செய்ய சர்க்கார் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே எம்.எஸ்ஸி. (மாதமாடிக்ஸ்), எம்.எஸ்ஸி. (பிசிக்ஸ்) மேல் பட்டப் படிப்புகள் இருந்து வருகின்றன. ஆனால், அங்கே பொருளாதாரத் துறையில் எம். ஏ. வகுப்பு திறக்கப்பட வேண்டும் என்ற தன்மையை எடுத்து வைத்தார்கள். இட நெருக்கடி காரணமாக சென்ற ஆண்டே பல்கலைக் கழகம் அனுமதி கொடுக்கவில்லை. இட வசதி ஏற்படுத்திக்கொண்டு இந்த ஆண்டு பல்கலைக் கழகத்தினிடத்தில் அது பற்றி முயற்சி செய்யலாம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கிறது.